தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-12-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பிஎஸ்என்எல்-லுடன் வேளாண் பல்கலைக்கழகம் ஒப்பந்தம்**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் பிஎஸ்என்எல் நிறுவனமும் 27-12-2016 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. அதன் மூலம் நீண்டகால வாடகையில் பைபர் தொடர்பு (Fibre connectivity) அனைத்து வேளாண் தொழில்நுட்பத்துறைகளுக்கும் கிடைக்கும். மேலும் மாணவர்களின் வசதிக்காக டெலிகாம் வலதியும் இந்த ஒப்பந்தத்தின் வழி கிடைக்கும்.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி மற்றும் பி.எஸ்.என்.எல். கோவைப்பகுதி முதன்மைப் பொது மேலாளர் திரு. சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் சி.ஆர். ஆனந்தகுமார் அவர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர் திவாகர் துரைராஜ், தகவல் தொழில்நுட்ப பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் துரைசாமி மற்றும் பல்வேறு பி.எஸ்.என்.எல் அதிகாரிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்